கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24-6-2017) சனிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-55 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

38. மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017-2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

39. தொழில் துறை பற்றிய செயல்பாட்டு ஆய்வுரை, 2016-2017. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

40. மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017-2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

41. நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017-2018. (தமிழ்)

42. சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் ஆகியோர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017-2018. (தமிழ்)

43. அவை உரிமைக் குழுவின் அறிக்கை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS